# கருத்தரங்கம்

*இந்தப் பகுதி, ஆரோக்கியமான கலந்துரையாடல்களுக்கென்றே உருவாக்கப்பட்டிருக்கின்றது. இங்கு பகிரப்படும் கருத்துகள் அவற்றை எழுதுவோருடையனவேயன்றி, சி.த.மை.யின் கருத்துகளாகா. வாசகர்களின் கருத்தாடல்களையும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறோம். அவர்கள் தம் கருத்துகளை admin@singaporetamil.org என்னும் மின்முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம். --- ஒருங்கிணைப்பாளர்*

# பண்டையத் தமிழரின் புத்தாண்டு தையா, சித்திரையா, ஆவணியா ?

வரலாற்றாசிரியர் முனைவர் சுரேஷ்குமார் முத்துக்குமரன்
(யேல்-சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகக் கல்லூரி)

**வாதத்துவக்கம்**

சில ஆண்டுகளுக்கு முன்பு, சித்திரை முதல் நாளன்று சமூக ஊடகத்தளமொன்றில் நான் தமிழ்ப் புத்தாண்டையொட்டிய ஒரு வாதத்தில் சிக்கிக்கொண்டேன். சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு கிடையாது, இது இந்துக்களின் புத்தாண்டு என்று சிலர் சாதித்தனர். நானோ சமணர்களும் பௌத்தர்களும் இதனைக் கொண்டாடும் பொழுது (Balbir 2020) எந்த வகையில் இதனை இந்துக்களின் புத்தாண்டு எனக் கூறமுடியும் என வாதிட்டேன். அதோடு இந்து என்கின்ற அடையாளம் அண்மையில் தோன்றிய அடையாளமாகும். இது தமிழ்ச் சொல் கூட கிடையாது. இருந்தாலும் தை முதல் நாளே தமிழர்களின் புத்தாண்டு என்னும் திண்ணமான நம்பிக்கை சிலரிடம் நிலவி வருகின்றது. இதற்கு ஆதாரமாகத் “தை பிறந்தால் வழி பிறக்கும்” என்னும் பழமொழியைச் சுட்டிக்காட்டுவர். அதோடு பொங்கலுக்குத்தான் பழைய பொருட்களைக் கழித்துக்கட்டும் வழக்கமும் வெள்ளையடிப்பதும் உண்டு. இது நியாயமான வாதம்தான் - ஆனால் இந்த வாதம் மட்டும் போதுமா?

வேளாண்குடியினரைப் பொறுத்தவரையில் பொங்கல்தான் முதன்மை பெற்ற விழா என்று கூறலாம். ஜாதிமத வேறுபாடுகளையும் கடந்து சமூக விழாவாக பொங்கல் விளங்குகிறது. ஆனால் பொங்கல் தமிழர்களின் புத்தாண்டாகுமா? இந்த வாதத்திற்கான ஆதாரங்கள் என்ன? பொங்கலையொட்டிக் கல்வெட்டுச் சாசனங்கள், இலக்கியக் குறிப்புகள் அல்லது அகழ்வாராய்ச்சி தரும் செய்திகள் ஏதேனும் உண்டா?

புத்தாண்டையொட்டிய இந்தச் சர்ச்சை எப்பொழுது துவங்கியது? புத்தாண்டைப்பற்றிய ஆய்வுகளையும் இலக்கிய-கல்வெட்டு ஆதாரங்களையும் அலசி, இந்த ஆய்வுக்கட்டுரை வழியே தமிழ் புத்தாண்டையொட்டிய ஒரு சில சான்றுகளைப் பகிர்ந்து கொள்கிறேன்.

**காலம் கணிக்கும் முறைகள்**

பாரதத்தில் காலத்தைக் கணிக்கும் முறைகள் பல உண்டு. அவற்றில் கதிரவன், திங்கள், வியாழன் போன்ற கோள்களையும் விண்மீன்களையும் கொண்டு கணிக்கும் முறைகள் முக்கியமானவை (Fuller 1980). பொங்கலுக்கும் சித்திரைத்திருநாளுக்கும் உள்ள ஒற்றுமை என்னவென்றால் இவை இரண்டும் கதிரவனையும் பன்னிரண்டு ராசிகளையும் அல்லது விண்மீன் கூட்டங்களையும் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. இதனை இனிக் கதிராண்டு ராசி முறை என்று அடையாளப் படுத்திக் கொள்வோம். கதிரவன் வானத்தில் சுறவம் அல்லது மகர ராசியோடு சேரும்பொழுது பொங்கல் கொண்டாடப்படுகிறது. மகர ராசியில் கதிரவன் இந்நாளில் புகுகின்ற காரணத்தால் சமஸ்கிருதத்தில் மகர சங்கிராந்தி என்னும் பெயர் வழங்கப் பட்டுள்ளது.

அதேபோன்று கதிரவன், ஆடு அல்லது மேஷ ராசியுடன் இணையும் பொழுது சித்திரைத் திருவிழா கொண்டாடப்படுகிறது. இதில் சிக்கல் என்னவென்றால் கதிரவனையும் 12 ராசிகளையும் கொண்டு காலத்தைக் கணிக்கும் முறை பாரதத்திற்கு அல்லது தமிழர்களுக்கு உரிய மரபு கிடையாது. இது மத்திய கிழக்கில், குறிப்பாக பாபிலோனியர்கள், பொது ஆண்டுக்கு முந்தைய (பொ.ஆ.மு.) 5-ஆம் நூற்றாண்டில் கண்டறிந்த காலம் கணிக்கும் முறையாகும் (Koch-Westenholz 1995: 163-164; Rochberg 1998: 29-30). திங்களையும், நட்சத்திரங்கள் எனப்படும் சிறிய விண்மீன் கூட்டங்களையும் கொண்டு காலத்தைக் கணிப்பதே பண்டையப் பாரத மரபு (Sakamoto-Goto 2011). தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் போன்ற தமிழ்ப் பண்டிகைகள் இந்த முறையினாலேயே நிறுவப்படுகின்றன. வடநாட்டிலிருந்து வந்த

பண்டிகைககளோ திதி பார்த்து நிறுவப்படுகின்றன. திதி, திகதி அல்லது தேதி என்பது திங்களுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள தூரத்தைக் கொண்டு கணிக்கப்படும் ஒரு நாள். ஒரு திதி சூரியோதயத்திற்குப் பிறகுகூட பிறக்கலாம். விநாயக சதுர்த்தி, கந்த சஷ்டி, கிருஷ்ண ஜென்மாஷ்டமி, ராம நவமி, வைகுண்ட ஏகாதசி, தீபாவளி எனப்படும் நரக சதுர்தசி போன்ற விழாக்கள் திதி முறையினால் நிறுவப்படுகின்றன. திதி முறையின் தோற்றம் தெளிவற்றது. நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளை அலசிப் பார்த்தால், இம்முறை மத்திய கிழக்கு அல்லது பாரதத்தில் தோன்றியிருக்கலாம்.

கதிராண்டு ராசி நாட்காட்டி மத்திய கிழக்கிலிருந்து வந்த காரணத்தால், நாம் இன்று கொண்டாடும் பொங்கலும் சித்திரைத் திருநாளும் பொது ஆண்டிற்கு முந்திய (பொ.ஆ.மு.) 5-ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே இம்முறையோடு நிறுவியிருத்தல் வேண்டும். பொங்கல் பண்டிகையும் சித்திரைத் திருநாளும் இதற்கு முன்பு நிலவியிருந்தால் காலத்தைக் கணிக்கும் வேறொரு முறையோடுதான் நிறுவப்பட்டிருக்கும்.

**பண்டையத் தமிழர் அறிந்த தை மாதம்**

*நீ தையில் நீர் ஆடிய தவம் தலைப்படுவாயோ?*

- **கலித்தொகை** 59

தை மாதத்தைக் குறிப்பிடுகின்ற சங்ககால நூல்கள் ‘தை நீராடல்’ என்னும் வழக்கைக் குறிப்பிடுகின்றனவேயொழிய பொங்கல் என்கின்ற அறுவடை விழாவைக் குறிப்பிடவில்லை. சங்ககாலப் புலவர்களைப் பொறுத்தவரையில் தை மாதத்திற்குரிய பெயர்ச்சிறப்பு கன்னிப்பெண்டிர் நற்கணவனை அடைய நோன்பெடுத்து நீராடி வரும் வழக்கமே (பரிபாடல் 11; நற்றிணை 80; கலித்தொகை 59; ஐங்குறுநூறு 84). பிற்காலத்தில், அதாவது ஆண்டாள் மற்றும் மாணிக்கவாசகர் வாழ்ந்த காலத்தில் (பொ.ஆ. எட்டாம் - ஒன்பதாம் நூற்றாண்டுகள்), இந்த நீராடுதல் வழக்கம் மார்கழி

மாதத்தோடு இணைக்கப்பட்டது. சந்திர நாட்காட்டியிலிருந்து கதிராண்டு ராசி முறைக்கு மாறிய காரணத்தால், தை நீராடுதல் வழக்கம் பிற்காலத்தில் மார்கழியுடன் சேர்க்கப்பட்டது என்பது ஆய்வாளர்கள் ராகவ ஐயங்கார் மற்றும் நோர்மன் கட்லரின் (Norman Cutler) கருத்து (Cutler 1979: 8-11). இருந்தாலும் தை ஒரு திங்கள் என்று துவங்கும் ஆண்டாள் இயற்றிய நாச்சியார் திருமொழிப் பாடல் பிற்காலத்திலும் தை மாதத்தில் ஒரு பாவை நோன்பு கடைப்பிடிக்கப்பட்ட வழக்கத்தைக் காட்டுகிறது.

பலரும் ஆச்சரியம் அடையும் வகையில், பண்டையத் தமிழ் இலக்கியத்திலோ கல்வெட்டுகளிலோ "பொங்கல்" என்ற தமிழ்ச்சொல் காணப்படுவதில்லை. பொங்கல் என்கின்ற உணவுப் பொருள்கூட போனகம், கொதி அல்லது அக்காரவடிசல் என்றுதான் கல்வெட்டுகளில் தென்படுகிறது. நமக்குக் கிடைத்துள்ள பழைய கோவில்-அரண்மனை சாசனங்களில் பொங்கல் மகரசங்கிராந்தி, மகரசங்கிறமம், உத்தராயண சங்கிராந்தி, உத்தராயணம் போன்ற வடமொழிபெயர்களாலே அடையாளப்படுத்தப்படுகிறது. இவ்விரு இடங்களிலும் அந்தணர்களின் செல்வாக்கு கூடுதலாகவே இருந்த காரணத்தாலும் வழிபாட்டிற்கு வடமொழி பயனில் இருந்ததாலும் வடமொழி வழக்கே செழித்திருந்தது. பொங்கலன்று கோவிலிலும் அரண்மனையிலும் செய்யப்படும் சடங்குகள் சற்று வேறுபட்டவையே. தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் (1674 – 1799) அரசவையில், மகரசங்கிராந்தியன்று வெண்ணையால் செய்த லிங்கத்தைப் பூசிக்கும் பழக்கம் உண்டு (வெங்கடராமையா 1984: 314). இரண்டாம் ராஜராஜ சோழனின் ஆட்சிக்காலத்தில் 1157-இல் அகோரசிவன் எனும் சிதம்பரத்துச் சிவாச்சாரியார் எழுதிய மஹோத்சவவிதி எனப்படும் சடங்குகள் சம்பந்தமான நூலில் பொங்கல் சங்கிராந்தி என்றே வழங்கப்படுகிறது. மகரசங்கிராந்தி மட்டுமில்லாமல் ஜூலை மாதத்தில் கதிரவன் தெற்கு நோக்கிச் செல்லும் கற்கடக சங்கிராந்தியும் தமிழ் சைவ கோவில்களில் கொண்டாடப்பட்டதை இந்நூல் வழியாக அறியலாம். இவ்விருநாட்களில் சிறப்பு அபிஷேகம், உற்சவ

மூர்த்திகள் ஊரை அல்லது கோவிலை வலம்வரும் வழக்கங்களைப் பற்றி அகோரசிவன் விவரித்துள்ளார்:

सङ्क्रान्ति विषुवं चैव विशेषेणायनद्वयम् … अथ सङ्क्रान्तिसमयेऽपि पूर्ववत् स्नपनादि पुरस्सरं देवमभिषिच्य मूललिङ्गादीन् सर्वालङ्कारैर् अलङ्कृत्य सर्वातोद्य समन्वितं विनायकसोमास्कन्दादिभक्तबेरसहितं ग्रामं वा पुरं आलयं वा प्रदक्षिणं नीत्वा ब्रह्मस्थाने वृषाग्रे वा पूर्वं नीराजनादि कृत्वा स्वस्थाने निवेशयेदिति।

"சங்கிராந்திகளும் (மகர, கற்கடக) சம இரவு நாட்களும் விசேஷமானவை … சங்கிராந்தியன்று முன் கூறியது போல் தெய்வத்திற்குச் சிறப்பு அபிஷேகம் செய்து, மூலலிங்கத்தையும் மற்ற தெய்வங்களையும் அலங்கரித்து, அனைத்து இசைக்கருவிகளையும் கொண்டு, பிள்ளையார் சோமாஸ்கந்தர் உட்பட உள்ள உற்சவமூர்த்திகளைக் கொண்டு பக்தர்களுடன் ஊர், நகரம் அல்லது கோவிலை வலம்வந்து பிறகு பிரம்மஸ்தானத்தில் அல்லது நந்தி முன்னால் வைத்து ஆரத்தி எடுத்து மூர்த்திகளை அவரவர் பீடங்களுக்குச் செலுத்துதல் வேண்டும்."

- அகோரசிவன், மஹோத்சவவிதி 30 (1157)

வைணவக் கோவில்களிலும் பொங்கல் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. கல்வெட்டுக் குறிப்புகளைப் பொறுத்தவரையில், 14-ஆம் நூற்றாண்டிலிருந்து மகரசங்கிறமம் என்னும் பெயரில் பொங்கல் விழா திருப்பதியில் மாபெரும் உற்சவமாகக் கொண்டாடப்பட்டது. இதற்கு 1308-இல் கோவிந்தராஜன் கோவிலிலுள்ள ஆண்டாள் சந்நிதியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஆதாரமாக உள்ளது (Sastry 1930: 126-127). 1535-இல் திருப்பதியில் பொறிக்கப்பட்ட தமிழ் கல்வெட்டொன்றில் பெருச்சி எனும் பெயர்கொண்ட தேவரடிய பெண் மகரசங்கிறமம் அன்று கோயிலுக்குப் பெரும் நன்கொடை அளித்த செய்தி இவ்விழாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது (Vijayaraghavacharya 1936: 84-85). திருப்பதியில் 1530, 1531, 1533, 1539 மற்றும் 1631-இல் பொறிக்கப்பட்ட

தமிழ்க் கல்வெட்டுகளில், பொங்கல் தினத்தன்று பெருமாளுக்கு அதிரசம், தோசை, இட்லி, அப்பம், சீடை, குணுக்கு, பணியாரம், சுகியன், வடை போன்ற உணவுப்பண்டங்கள் நைவேத்தியமாக வழங்கப்பட்ட செய்திகள் உண்டு (Vijayaraghavacharya 1936: 8, 26, 56, 259, 132, Vijayaraghavacharya 1937: 177). கோவிந்தராஜர் கோவிலின் முதல் பிரகாரத்தில் இருக்கின்ற 17-ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டு பெருமாளுக்குப் பொங்கலன்று படைக்கபட்ட பொங்கற் சோற்றைக் கொதி என்றே வழங்குகிறது (Vijayaraghavacharya 1937: 177).

பொங்கல் தமிழர் மரபு மட்டும் கிடையாது. இந்த அறுவடை விழா பாரதம் முழுக்க வெவ்வேறு பெயர்களால் கொண்டாடப்படுகிறது. இந்த பண்டிகைக்குத் தொல்லியல் சார்ந்த சான்றுகளும் உண்டு. பண்டைய கருநாடகத்தில் ஆண்டாண்டுகாலமாக போகிப் பொங்கலன்று மேய்ப்பரால் மாட்டுச் சாணம் எரிக்கப்பட்ட இடங்கள் காலப்போக்கில் சாம்பல் குன்றுகளாக மாறிவிட்டன. இதனாலேயே இந்த பண்டையத் திராவிடமொழி பேசிய கலாச்சாரத்திற்குச் சாம்பல்குன்று கலாச்சாரம் ("ashmound culture") என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சாம்பல் குன்றுகள் பொ.ஆ.மு. மூன்றாம் மற்றும் இரண்டாம் புத்தாயிரத்தைச் சேர்ந்தவை (Allchin 1963; Fuller 2001).

இன்று நெல் இல்லாமல் பொங்கல் கிடையாது. ஆனால் நெல் தென்னாட்டிற்கு உரிய பயிர் கிடையாது. இது வடநாட்டில் கங்கைநதியோரம் பொ.ஆ.மு. மூன்றாம் புத்தாயிரத்தில் கொல்லைப்படுத்தப்பட்டப் பயிர் (Bates, Petrie & Singh 2017). தென்னகத்தில் நெல் முதலாம் புத்தாயிரத்தில்தான் பரவலாகப் பயிரிடப்பட்டது. இதற்குத் தொல்பொருள் சான்றுகள் கூடுதலாகவே உள்ளன (Kingwell-Banham 2019). சங்ககாலத்திலும் சில உலர்ந்த இடங்களில் நெல்லைவிடத் தென்னகத்தில் கொல்லைப்படுத்தப்பட்ட தானியங்களே பரவலாக இருந்தன. புறநானூற்றின் 335ஆம் பாடலில் மாங்குடி கிழார் இவ்வாறு கூறுகிறார்: “கருங்கால் வரகே இருங்கதிர்த்

தினையே சிறு கொடிக் கொள்ளே பொறி கிளர் அவரையொடு இந்நான் கல்லது உணாவும் இல்லை." அதாவது தமிழர்களுக்கு உரிய பயிர்களில் சிறந்தவை வரகு, தினை, கொள் மற்றும் அவரை. நெல் மற்ற சங்கப்பாடல்களில் காணப்படினும், இந்தப் பட்டியலில் தென்படாமல் இருப்பது கவனிக்க வேண்டியது.

***சித்திரைத் திருநாள்***

திண் நிலை மருப்பின் **ஆடு தலையாக** விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து

- நெடுநல்வாடை 160-161

பொங்கலைப் போன்று சித்திரைத்திருநாளுக்கும் சங்கஇலக்கியத்தில் நேரடியான சான்றுகள் கிடையாது. இருந்தாலும் சில மறைமுகமான செய்திகள் உண்டு. பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய வேந்தனின் காலத்தில் பாடிய நெடுநல்வாடை என்னும் சங்கநூலின் 160ஆம் வரியில், கதிராண்டு ராசி முறை குறிப்பிடப்படுகிறது. பரிபாடலின் 11ஆம் பாடலிலும் மிதுனம் மற்றும் மகரம் போன்ற ராசிகள் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. அதுமட்டுமில்லாமல் மேற்கூறிய நெடுநல்வாடை வரியில் கதிரவன் வானத்தில் செல்லும் மார்க்கத்தில் சந்திக்கும் முதல் விண்மீன் கூட்டம் ஆடு அதாவது மேஷம் என்று நெடுநல்வாடை தெளிவாகக் கூறுகிறது. இதிலிருந்து புலப்படுவது என்னவென்றால் கதிரவன் மேஷ ராசியோடு இணையும் தருணமே, அதாவது சித்திரையின் முதல் நாளே, ஆண்டின் தொடக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதுதான்.

தமிழர்களைப் போன்று மற்ற திராவிட மொழிகள் பேசும் மக்களும் சித்திரையின் முதல் நாளன்றே புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் கன்னடர்களும் தெலுங்கர்களும் சித்திரை மாதத்தைத் திதி

கொண்டு கணிப்பதால் இது தமிழர்களின் சித்திரை மாதத்திற்கு முன்பே பிறக்கிறது. ஈழத்தில் சிங்களர்களும் தென்கிழக்காசியாவில் இருக்கும் மக்களும் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்தால் அவர்களும் சித்திரை முதல் நாள் அன்றே புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள். சைத்ரமஹோத்சவம் (சித்திரை பெரிய விழா) அல்லது சைத்திரோட்சவம் (சித்திரை விழா) என்ற வடமொழி பெயர்களாலும் இவ்விழா பண்டைய பாரதத்தின் வெவ்வேறு பகுதிகளில் கொண்டாடப்பட்டது (Anderson 1988).

ஆனால் இதில் குழப்பம் என்னவென்றால் புத்தாண்டு அல்லது வருடப்பிறப்பு போன்ற சொற்கள் பண்டைய நூல்களிலோ கல்வெட்டுகளிலோ தோன்றுவதில்லை. இதன் பயன்பாடு பிற்காலத்தில்தான், பொ.ஆ. இரண்டாம் புத்தாயிரத்தின்போதுதான் நிலவியது. உதாரணத்திற்கு ஈழத்தமிழரான போஜராஜபண்டிதர் 1310-இல் இயற்றிய ஜோதிட நூலான சரஜோதிமாலையில் சித்திரையின் முதல் நாள் வருஷப்பிறப்பு என்று வழங்கப்படுகிறது (வருஷப்பிறப்புக் கருமம், சுபாசுபப்படலம் 69-72). பல்லவ மற்றும் பிற்காலச் சோழர் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் இந்த விழா சித்திரை விசு திருவிழா அல்லது சித்திரை விழா என்றே வழங்கப்பட்டது. இன்று கூட கேரளத்தில் சித்திரை முதல் நாள் மலையாளத்தில் சித்திரை விசு என்றுதான் அழைக்கப்படுகிறது. விசு என்பது சமஸ்கிருதச் சொல். இதற்குச் சமநிலை என்று பொருள். பண்டைக் காலத்தில் சித்திரை முதல் நாள் அன்று கதிரவன் நிலநடுக்கோட்டினைக் கடந்து செல்லும் நாளோடு பொருந்தியது. இந்த நிகழ்வை ஆங்கிலத்தில் equinox என்று அழைப்பர். இந்த நாளில் இரவும் பகலும் ஒரே அளவாக (ஏறத்தாழ பன்னிரண்டு மணி நேரம்) இருக்கும் அதனால் சித்திரையின் முதல் நாள் சித்திரை விசு என்று அழைக்கப்பட்டது. பூமி அதன் அச்சில் சுழல்கின்ற காரணத்தால் (axial precession), இன்று இந்தச் சம பகல்-இரவு நிலையோடுள்ள நாள் சித்திரைத் திருநாளோடு கூடிவருவதில்லை.

பல்லவ மற்றும் பிற்காலச் சோழர் கல்வெட்டுகளிலிருந்து இந்தச் சித்திரைத் திருநாள் கோலாகலமாக கொண்டாடப்பட்டது என்று நாம் அறியலாம். ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த நிருபதுங்கப் பல்லவனின் ஆட்சி காலத்தில் திருத்தவத்துறை (இன்று லால்குடி) என்னும் ஊரிலிருந்து கிடைத்த கல்வெட்டிலிருந்து (பொ.ஆ. 871) சித்திரைத் திருவிழா ஏழு நாட்களுக்குக் கொண்டாடப்பட்டது என்று அறியலாம் (Mahalingam 1988: 435-436). பன்னிரண்டாம் நூற்றாண்டில் இரண்டாம் ராஜராஜ சோழன் விக்ரமாதித்தன்மங்களம் என்னும் ஊரையே சித்திரைத் திருநாள் விழாவிற்கு ஒரு சிவன் கோவிலுக்குத் தானமாகத் தந்த கல்வெட்டுச் செய்தியும் உண்டு (Aiyer 1937: 266). இந்தத் தமிழ் கல்வெட்டு தெற்கு ஆந்திராவில், குடிமல்லம் என்னும் ஊரிலிருக்கும் பரசுராமேஸ்வரர் கோவிலில் உள்ளது.

**சித்திரையில் ஏன் புதுவருடம் பிறக்க வேண்டும்?**

கதிராண்டு ராசி முறையில் மேஷ ராசியே முதல் ராசி என்று கருதப்படுகிறது. ஏற்கனவே கூறியதுபோல் பண்டைக் காலத்தில் சித்திரை முதல் நாள் இரவும் பகலும் ஒரே அளவாக இருக்கும் நாளோடு கூடி வந்தது. இது இளவேனில் அல்லது வசந்த காலத்தின் வருகையை குறிக்கிறது. மா, வேம்பு மற்றும் கொன்றை போன்ற மரங்கள் பூத்துக்குலுங்ககூடிய நேரமிது. வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று கொண்டுவரும் மழை இத்தோடு முடியும். வெப்பமான வானிலை இனி நிலைத்திருக்கும். இதன்காரணத்தால் சீவகசிந்தாமணியில், திருத்தக்கதேவர் சித்திரையையும் அதன் பின்வரும் மூன்று மாதங்களையும் "தீயுமிழ் திங்க ணான்கும்" என்று வகைப்படுத்தியுள்ளார் (சீவகசிந்தாமணி, முத்தி இலம்பகம் 3070). நான்முகன் படைத்தல் தொழிலைச் சித்திரை முதல் நாளன்று தொடங்கினான் என்பது மற்றொரு நம்பிக்கை (Pillay 1953: 234).

இதையெல்லாம் கூட்டிப்பார்க்கும்பொழுது புத்தாண்டு என்ற வகையில் சித்திரைத் திருநாளுக்கே அதிகளவான வரலாற்றுச் சான்றுகள், அதாவது

கல்வெட்டு மற்றும் இலக்கியக் குறிப்புகள், உண்டு. ஐரோப்பிய கிருத்துவச் சமயப்பரப்பாளர்களும் சித்திரை முதல் நாளிலேயே தமிழர்களின் புத்தாண்டு என்று பல இடங்களில் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து குறிப்பிட்டுள்ளனர் (Euler 1738: 206; Ziegenbalg and Germann 1867: 56; Row 1834: 21). ஜான் நாய்ஸ் (John Noyes) என்னும் அமெரிக்கக் கிறித்துவச் சமயப்பரப்பாளர், 1851ஆம் ஆண்டில், யாழ்ப்பாணத்தில் உள்ள ஜாவகச்சேரியில் சித்திரைப் புத்தாண்டு விழாவைக் கண்டுகளித்தார். அவர் அன்று கண்ட கேளிக்கைகளைக் கடிதம் வழியாகத் தமது அமெரிக்க நண்பரோடு பகிர்ந்துகொள்கிறார். "சிறியோரும் பெரியோரும் பெண்டிரும் ஆடவர்களும் கலந்து பல விளையாட்டுக்களில் ஈடுபட்டனர்" என்று அவர் எழுதுகிறார். "அமெரிக்காவில்கூட காணமுடியாதப் பல்வகையான காற்றாடி, பட்டங்கள் கொண்டு மக்கள் விளையாடினர்" என்று வர்ணிக்கிறார். அதுமட்டுமில்லாமல் சித்திரைப் புத்தாண்டின் போது பிள்ளைகள் பெரியோரிடமிருந்து பணம் பெறுவர் என்று குறிப்பிடுகிறார் (Noyes 1851). இந்த வழக்கத்திற்குத் தமிழில் கைமுழுத்தம் அல்லது கைவிசேடம் என்று பெயர்.

**சர்ச்சை ஆரம்பம்**

ஆகப் பண்டையத் தமிழ் நூல்களையும் கல்வெட்டுகளையும் பொறுத்தவரையில் எந்தச் சான்றும் பொங்கல்தான் புத்தாண்டு என்று வெளிப்படையாகச் சாதிக்கவில்லை. தை மாதத்தை வருடத்தின் முதல் மாதமாகக் கருதும் வழக்கம் மேல்நாடுகளோடு வர்த்தகத் தொடர்பு கொண்ட தமிழ் இஸ்லாமியர்களிடம், முக்கியமாக மரைக்காயரிடம், தொடங்கியிருக்கலாம். ஒல்லாந்தர் (Dutch) மற்றும் ஆங்கிலேயரோடு 17ஆம் நூற்றாண்டிலிருந்து வர்த்தகத்தில் தீவிரமாக ஈடுபட்ட மரைக்காயர் சமூகத்தினர் கணக்கு வைப்பு நடவடிக்கைகளைக் காரணமாகக் கொண்டு தமிழ் நாட்காட்டியை மேல்நாட்டு நாட்காட்டியோடு ஒத்துப் போக வைக்கும் முயற்சியில் ஜனவரியோடு இணையும் தை மாதத்தை முதல் மாதமாக கருதியிருக்கலாம். மரைக்காயர் சமூகத்தினர் இவ்வாறு கருதியிருப்பதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் உண்டு. தொழுகை நேரங்களைக் குறிக்கும் சில தமிழ்ப் பள்ளிவாசல் கல்வெட்டுகள் 17ஆம்

நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலிருந்து தை மாதத்தை முதல் மாதமாகக் கொண்டிருக்கின்றன. இவ்வாறே கீழக்கரையில் (ராமநாதபுரம் மாவட்டம்) இருக்கின்ற 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பக்காலத்தைச் சேர்ந்த ஜும்மா பள்ளிவாசல் கல்வெட்டும் 1850-இல் ஹபீப் முஹம்மது மரைக்காயர் மற்றும் அப்துல் காதர் மரைக்காயர் கட்டிய ஓடக்கரை பள்ளிவாசலில் காணப்படும் கல்வெட்டும் அமைந்துள்ளன (Raja Mohamad 2004: 48-49, 135, 137). குளச்சல் ஜும்மா பள்ளிவாசலில் (கன்னியாகுமரி மாவட்டம்) இருக்கும் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொழுகை நேரக் கல்வெட்டும் தை மாதத்தையே முதல் மாதமாகக் கொண்டிருக்கிறது (Raja Mohamad 2004: 49, 136).

சில மரைக்காயர்கள் பொங்கலைக் கொண்டாடியிருந்தாலும், பொங்கலுக்கும் இந்தத் தொழுகை நேர நாட்காட்டிகளுக்கும் உள்ள தொடர்பு ஐயத்திற்கிடமானது. மரைக்காயர்களைப் பொருத்தவரையில் வேளாண்மையில் ஈடுபாடு குறைவே. எனவே அறுவடை விழாவான பொங்கலைக் காரணமாகக் கொண்டுதான் இந்த இஸ்லாமிய தொழுகை நேர நாட்காட்டிகள் தை மாதத்தில் ஆரம்பிக்கின்றன என்பதை உறுதியாக வாதிடமுடியாது.

இது இவ்வாறிருக்க, 1920களிலிருந்து சமூக சீர்திருத்தாளர்களும், தனித்தமிழ் இயக்கத்தைச் சேர்ந்த சிலரும், திராவிட தேசியவாதிகளும் பொங்கல்தான் தமிழர்களின் புத்தாண்டு என்ற கருத்தினை முன்வைத்துள்ளனர். தைப்புத்தாண்டின் ஆதரவாளர்கள், 1921-இல் பச்சையப்பன் கல்லூரியில் மறைமலை அடிகளின் தலைமையில் கூடிய அறிஞர் குழு ஆய்வு செய்து தை முதல் நாளே தமிழாண்டு பிறப்பு என முடிவு செய்தது என்றும், சங்க இலக்கியங்களில் தை மாதமே புத்தாண்டு என்ற குறிப்பு உள்ளதென்றும், புத்தாண்டன்று பிறப்பதாகச் சொல்லப்படும் அறுபது தொடர் ஆண்டு வட்டத்தில் எதுவும் தமிழ்ப்பெயர் இல்லையென்றும் கூறியுள்ளனர். இதற்கு எதிராக, தை தொடர்பான சங்க இலக்கிய வரிகள் எதுவும் தைமாத நீராட்டு விழாவொன்றைக் குறிப்பிடுகின்றனவே அன்றி, புத்தாண்டைப் பாடவில்லையென்றும்,

1921இல் அத்தகைய ஒரு மாபெரும் மாநாடு இடம்பெற்றதற்கான எந்தவொரு ஆவணமோ, மாநாட்டு இதழோ, அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களோ எதுவுமே பொதுவெளியில் வைக்கப்படவில்லையென்றும் 1921இல் மறைமலையடிகள் இலங்கையில் தைப்பொங்கல்தான் கொண்டாடினார் என்றும் எதிர்வாதக் கூற்றுகள் எழுந்தன.

பிராமணர்களின் மற்றும் சமஸ்கிருதத்தின் தாக்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற நோக்கத்தில், சித்திரைத் திருவிழாவும் கடுமையான எதிர்ப்புக்கு ஆளாயிற்று என்னும் கருத்தும் பரவலாக உண்டு. ஆயினும், இரண்டு விழாக்களையும் தீர்மானிக்கும் பஞ்சாங்கம் ஒன்றே, கதிராண்டு ராசி முறையும் ஒன்றே. இவையனைத்திற்கும் பிராமணர்களுக்கும் மறுக்கமுடியாத தொடர்பு உண்டு. இரண்டாயிரங்களில் இந்தச் சர்ச்சை தமிழ் நாட்டில் அரசியலாக்கப்பட்டதைப் பலரும் அறிவர். தை முதல்நாள்தான் புத்தாண்டு என்று, திமுக அரசால் 2008 தை மாதம் 23 ஆம் நாள் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. 2011இல் இது அதிமுக அரசால் ரத்து செய்யப்பட்டு மீண்டும் சித்திரை முதல் நாள் புத்தாண்டாக அறிவிக்கப்பட்டது. ஈழத்தில் தமிழ் விடுதலைப் புலிகள் சிங்களர்களிருந்து தனித்து இருக்கும் தமிழ் அடையாளம் ஒன்று இருத்தல் வேண்டும் என்ற நோக்கத்தில் பொங்கலைத் தமிழ்ப் புத்தாண்டாக வரவேற்றனர்.

**ஆவணியில் மறைந்த புத்தாண்டு வழக்கமா?**

ஆவணியிலும் தமிழ்ப் புத்தாண்டு வழக்கம் இருப்பது பலருக்குப் புதிதாகவும் புதிராகவும் இருக்கும். கேரளத்தில் ஆவணியில் புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. இதை ஓணம் என்று பொதுவாக வழங்குவர். உண்மையில் ஓணம் என்பது பண்டையத் தமிழ் விழாவாகும். பொங்கல் போன்று இதுவும் அறுவடை விழாவாக உள்ளது. ஆனால் பொங்கல் மற்றும் சித்திரைத்திருவிழா போலல்லாமல் இந்த விழா சந்திரனையும் நட்சத்திரங்களையும் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. ஆவணியில் சந்திரன் அட்டம்/ ஹஸ்த்தம் என்னும் நட்சத்திரத்தில் துவங்கி, திருவோண

நட்சத்திரம் வரை இருக்கும் பத்து நாட்கள் ஓணமாகக் கொண்டாடப்படுகின்றன. இதற்கு அடுத்த நாளாகிய ஆவணி அவிட்டமும் விசேடமான நாள். காலத்தைக் கணிக்கும் இந்த நட்சத்திர முறை சிந்து வெளி நாகரிகம் தொட்டு பாரதத்தில் இருந்து வருகின்றது என்பது அஸ்கோ பார்ப்போலா (Asko Parpola) போன்ற சிந்து வெளி நாகரிக ஆய்வாளர்கள் கூறும் கருத்து (Parpola 2015: 187-209). கதிராண்டு ராசி முறை, ஏற்கனவே கூறியதுபோல் பாபிலோனியரின் கண்டுபிடிப்பு. அதனால் இன்றையப் பொங்கலையும் சித்திரைத்திருவிழாவையும் காட்டிலும் வயதில் முதிர்ந்தது ஓணப்பண்டிகை.

நமக்குக் கிடைத்துள்ள ஆகப் பழமையான தமிழ் நூலான தொல்காப்பியத்தின் பொருளதிகாரதில் காலங்களை வகுக்கும் பொழுது, தொல்காப்பியர் கார்காலத்தையே முதல் காலமாகக் குறிப்படுகிறார் (அகத்திணையியல் 6-12, பொருளதிகாரம்). கார்காலத்தின் தொடக்கம் ஆவணி மாதமே. தொல்காப்பியத்தின் வழக்கை எடுத்துக்கொண்டால் ஆவணியில்தான் அல்லது கார்காலத்தில்தான் ஆண்டு துவங்கியிருக்கவேண்டும். திவாகர நிகண்டு மற்றும் சூடாமணி நிகண்டான பிற்கால நூல்களும் கார்காலத்தையே முதல் காலமாக கொண்டிருக்கின்றன (தெய்வப் பெயர்த்தொகுதி, திவாகர நிகண்டு; சூடாமணி நிகண்டு 95). தொல்காப்பியர் புத்தாண்டைப்பற்றியோ ஓணத்தைபற்றியோ வெளிப்படையாகக் கூறாமல் இருந்தாலும் மற்ற இலக்கிய நூல்களில் ஓணம் காணப்படுகிறது. பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மதுரைக்காஞ்சி என்னும் சங்கநூல் இந்த விழாவினை "மாயோன் மேய ஓண நன்னாள்" அதாவது திருமாலுக்கு உகந்த ஓண நன்னாள் என்று குறிப்பிடுகிறது (591). தமிழர்கள் ஓண விழாவைச் சங்ககாலத்திலேயே கொண்டாடியதற்கு இது முக்கியச் சான்றாகும். திருஞானசம்பந்தர் மற்றும் பெரியாழ்வார் போன்ற பக்திப் பாடல் ஆசிரியர்களும் ஓணப் பண்டிகையைக் குறிப்பிடுகின்றனர் (பெரியாழ்வார் திருமொழி 6; திருஞானசம்பந்தர், இரண்டாம் திருமுறை 47.2). இருந்தாலும் திருஞானசம்பந்தர் ஆவணியிலல்லாமல் ஐப்பசியில் வரும் ஓண விழாவை விவரித்துள்ளார். ஸ்தாணு ரவி என்கின்ற சேரநாட்டு வேந்தனின்

ஆட்சிகாலத்தைச் சேர்ந்த 9ஆம் நூற்றாண்டுத் தமிழ்ச் செப்பேடு ஒன்றில் சென்டன் சங்கரன் என்றவன் திருவல்லாவில் ஓண விழா தினத்தன்று அன்னதானத்திற்காக நிலம் தந்தச் செய்தி உள்ளது (Narayanan 2013 :436). இருந்தாலும் சித்திரைத்திருவிழா போன்று எந்தப் புராதன கல்வெட்டோ இலக்கியமோ புத்தாண்டு என்னும் சொல்லைப் பயன்படுத்தி ஓணத்தைக் குறிப்பிடுவதில்லை.

## முடிவு: இருதலை கொண்ட ஓர் ஆண்டு

கேரளத்தில் ஓணம் முக்கியமாக இருந்தாலும் சித்திரை விசு திருவிழாவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இரண்டும் வெவ்வேறு வகைகளில் புத்தாண்டுகளாகக் கொண்டாடப்படுகின்றன. பண்டையத் தமிழகத்தில் இரண்டு புத்தாண்டு மரபுகள் இருந்திருக்கலாம். காலப்போக்கில் மேற்குப் பகுதிகளில் சித்திரைத் திருவிழாவிற்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஓணம் இன்றையத் தமிழ் நாட்டில் மறைந்து மேற்குப் பகுதிகளில் மட்டும் அதாவது பிற்காலத்தில் மலையாளம் எழுந்த கேரளத்தில் செழித்தது. பாரதம் முழுக்க ஏன் உலகளவில் கூட பெரும்பாலான மக்கள் இளவேனில் காலத்தில்தான் புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள். பாரசீக நவுரூஸ், பாபியலோனியர்களின் அகிடு போன்ற அக்காலத்தியப் புத்தாண்டுகள் இளவேனில் காலத்தில் நிகழ்ந்தன. வேறு சில பண்பாடுகள், இலையுதிர்காலத்தில் அதாவது தமிழர்களுக்குக் கார் மற்றும் கூதிர்காலத்தில் தத்தம் புத்தாண்டுகளைக் கொண்டிருக்கின்றன. தமிழர்களைப் போன்று யூதர்களுக்கும் இரண்டு புத்தாண்டு மரபுகள் உண்டு: ஒன்று ஏப்ரல் மாதத்தில் இளவேனில் காலத்தில் நிகழும் பாஸ்கா (Pesach); மற்றொன்று செப்டம்பர் மாதத்தில் கொண்டாடப்படும் ரோஷ் ஹஷானா (Rosh Hashanah). புத்தாண்டு என்று கூறும் வகையில் சித்திரைக்கும் ஆவணிக்கும் மட்டுமே கூடுதலான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. தைப்பொங்கலோ முக்கியமான அறுவடை விழாவாகத் திகழ்ந்தாலும் பண்டைய இலக்கிய-கல்வெட்டுச் சான்றுகளில் புத்தாண்டாகத் தென்படுவதில்லை.

மொத்ததில், வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் மட்டும் பார்க்கும் போது தமிழர்களின் புத்தாண்டு இன்ன மாதத்தில்தான் துவங்குகிறது என்று அறுதியிட்டுக் கூறுவது வாதத்திற்குரியதே. எனினும், காலவோட்டத்தில், பண்பாடுகளும் சடங்குகளும் மாற்றங்களுக்குள்ளாகி, அந்தந்தக் காலத்திற்கும் இடத்திற்கும் மக்களுக்கும் ஏற்ப அவை பரிணமித்துக் கொண்டிருப்பது கண்கூடு. சிங்கப்பூர்த் தமிழர்களுக்கு எது புத்தாண்டு என்பதை அவர்களே ஒருமித்து முடிவு செய்யலாமே!

**மேற்கோள்கள்**

**தமிழ்**

*ஐங்குறுநூறு*. அ. தட்சிணாமூர்த்தி (ed.) (2004) சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

*கலித்தொகை*. அ. விசுவநாதன் (ed.) (2017) சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

*சீவகசிந்தாமணி*. (1941) திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

*சூடாமணி நிகண்டு*. கோ. இளஞ்சேரனார் (ed.) (1999) தஞ்சாவூர்: சரசுவதி மகால் நூலகம்.

*திவாகர நிகண்டு*. (1958) திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

*தேவாரம்*. கோபால் ஐயர் (ed.) (1984). புதுச்சேரி: பிரெஞ்சு நிறுவனம்.

*தொல்காப்பியம்*. புலியூர்க் கேசிகன் (ed.) (1961) சென்னை: பாரி நிலையம்.

*நற்றிணை*. வெ. பாலசுப்பிரமணியன் (ed.) (2017) சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

*நாலாயிர திவ்வியப் பிரபந்தம்*. வேங்கடசாமி ரெட்டியார் (ed.) (1981) சென்னை: திருவேங்கடத்தான் திருமன்றம்.

*பத்துப்பாட்டு (மதுரைக்காஞ்சி; நெடுநல்வாடை)*. வி. நாகராசன் (ed.) (2011) சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

*பரிபாடல்*. பெ. சுப்பிரமணியன், வெ. பாலசுப்பிரமணியன், அ. தட்சிணாமூர்த்தி (eds.) (2004) சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

*புறநாநூறு*. வெ. பாலசுப்பிரமணியன் et al (eds.) (2004) சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

போஜராஜபண்டிதர், *சரஜோதிமாலை*. சந். ரகுநாதையர், சு. நடராசையர். (eds.) (1985) யாழ்ப்பாணம்: இ.வெங்கடேச ஐயர்.

வெங்கடராமையா, கே. எம். (1984) *தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்*. தஞ்சாவூர்: தமிழ் பல்கலைக் கழகம்.

ஆங்கிலம்

Aiyer, K.V.S. (ed.) (1937). *South Indian Inscriptions, Volume VIII*. Madras: Government Press.

Allchin, F. R. (1963). *Neolithic Cattle-keepers of South India: A Study of the Deccan Ashmounds*. Cambridge: Cambridge University Press.

Anderson, L. (1988). The Indian Spring Festival (Vasantotsava): One or Many? *Annals of the Bhandarkar Oriental Research Institute*, 69, No. 1, pp. 63-76.

Balbir, N. (2020). Jain Calendar. *Jainpedia: the Jain universe online*, http://www.jainpedia.org/themes/practices/festivals/jain-calendar.html

Bates, J., Petrie, C. A., & Singh, R. N. (2017). Approaching rice domestication in South Asia: new evidence from Indus settlements in northern India. *Journal of Archaeological Science*, 78, 193-201.

Cutler. N. (1979). *Consider Our Vow: Translation of Tiruppāvai and Tiruvempāvai into English*. Madurai: Muttu Patippakam.

Davis, R.H. (2010). *A Priest's Guide for the Great Festival: Aghorasiva's Mahotsavavidhi*. Oxford; New York: Oxford University Press.

Euler, L. (1738). De Indorum anno solari astronomico. In. Bayer, T.S., *Historia regni Graecorum Bactriani*. St. Petersburg: Academia Scientiarum, 201 – 213.

Fuller, C. J. (1980). The Calendrical System in Tamilnadu (South India). *Journal of the Royal Asiatic Society*, 112(1), 52-63.

Fuller, D. Q. (2000). Ashmounds and hilltop villages: the search for early agriculture in southern India. *Archaeology International*, 4, 43-46.

Kingwell-Banham, E. (2019). Dry, rainfed or irrigated? Reevaluating the role and development of rice agriculture in Iron Age-Early Historic South India using archaeobotanical approaches. *Archaeological and Anthropological Sciences*, 11(12), 6485-6500.

Koch-Westenholz, U.S. (1995). *Mesopotamian Astrology: An Introduction to Babylonian and Assyrian Celestial Divination*. Copenhagen: Museum Tusculanum Press.

Mahalingam, T.V. (1988). *Inscriptions of the Pallavas*. New Delhi: Indian Council of Historical Research.

Narayanan, M.G.S. (2013). *Perumals of Kerala*. Thrissur: CosmoBooks.

Noyes, J.T. (1851). A Heathen New Year Festival. In. *The Youth's Dayspring*. Boston: American Board of Commissioners for Foreign Missions, 157-159.

Parpola, A. (2015). *The Roots of Hinduism: The Early Aryans and the Indus Civilization*. Oxford; New York: Oxford University Press.

Pillay, K.K. (1953). *The Sucindram Temple*. Adyar: Kalakshetra Publications.

Raja Mohamad, J. (2004). *Islamic architecture in Tamil Nadu*. Chennai: Government Museum.

Rochberg, F. (1998). *Babylonian Horoscopes*. Philadelphia: American Philosophical Society.

Row, V. (1834). An account of the Hindoo holy days and festivals. *Journal of Literature and Science* 1, 15-25.

Sakamoto-Goto, J. (2011). The Nakṣatra system in the Vedic calendar. *Journal of Indian and Buddhist Studies* 59.3, 1075-1083.

Sastry, S.S. (1930). *Early Inscriptions*. Tirupati: Tirumala Tirupati Devasthanams.

Vijayaraghavacharya, V. (1936). *Inscriptions of Acyutaraya's Time*. Tirupati: Tirumala Tirupati Devasthanams.

Vijayaraghavacharya, V. (1937). *Inscriptions of Venkatapatiraya's Time*. Tirupati: Tirumala Tirupati Devasthanams.

Ziegenbalg, B. (1867). *Genealogie der malabarischen Götter, with notes and explanations by Rev. Wilhelm Germann*. Madras: Christian Knowledge Society's Press.